# முயலும் ஆமையும்

ஒரு காட்டில் ஒரு முயல் இருந்தது, அதற்கு தாகமாக இருந்தது. முயல் தண்ணீர் குடிக்க ஒரு குளத்திற்கு சென்றது. முயல் குளத்தின் நீரை அருந்திய பின் அதன் தாகம் தீர்ந்தது. அக்குளத்தின் அருகில் முயல், ஆமையை பார்த்தது. முயல் ஆமையின் அருகில் சென்றது. முயல், ஆமையிடம் நம் இருவருக்கும் ஓட்டப்பந்தயம் வைத்துக் கொள்வோமா என்று கேட்டது. சரியென்று ஆமை, முயலின் சவாலை ஏற்றுக் கொண்டது. ஆமையும், முயலும் போட்டிக்கான நாளையும், இடத்தையும் தேர்வு செய்தனர்.

போட்டி நாளன்று, ஆமையும், முயலும் போட்டிக்கு ஆயத்தமானார்கள். ஓட்டப்போட்டி பந்தயத்திற்குக்கான எல்லைக்கோட்டில் முயலும், ஆமையும் நின்றனர். முயலும், ஆமையும், ஓட ஆரம்பித்தனர். முயல் வேகமாக தாவி தாவி ஓடியது. ஆமை மெதுவாக ஊர்ந்து பின்னால் வந்தது.

# முயலும் ஆமையும்

முயல், ஆமையை கடந்து வெகுதூரம் சென்றது. முயல் தன்னை போல், ஆமையால் ஓட முடியாது என்ற கர்வத்தில் நின்றது. முயல், ஆமை வருவதற்குள் சற்று நேரம் களைப்பு தீர ஓய்வு எடுக்கலாம் என்று நினைத்தது. முயல், பந்தயத்தை மறந்து ஒரு மரத்தடியில் நன்கு தூங்கியது. ஆமை நிதானமாக மெதுவாக வந்தது. முயலை தாண்டி சென்றது. முயல் கண் விழித்து பார்த்த போது, ஆமை எல்லை கோட்டை நெருங்கிச் சென்று கொண்டிருந்தது. முயல் உடனே துள்ளிக் குதித்து ஓட துவங்கியது. ஆமை போட்டியின் வெற்றி இலக்கை அடைந்து விட்டது. ஆமை ஓட்டப்பந்தயப் போட்டியில் வெற்றி பெற்றது.

**கருத்து :-**

**நாம் பிறரை தாழ்வாக எண்ணிவிடக் கூடாது. நாம் எடுத்த செயலை முழுவதுமாக முடிக்க வேண்டும் என்ற கவனத்துடன் செயல்பட வேண்டும்.**